முருகப்பெருமான் துணை

# மகான் யோகச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.04.2024,** வியாழக்கிழமை

1. களம் காண் ஞான வழியில்
   களம் காண் தரும வழியில்
   பலம் கூட்டி அரங்கமகானும்
   பசிபிணி விரட்டி உலகை மீட்கும்
2. மீட்கும் வித்தையை மக்களுக்கு
   மேலான ஞானமாக அருளுகின்ற
   மாட்சிமை மிக்க ஆறுமுக ஞானியே
   மகானே உன் பெருமை கூறி
3. கூறியே சோபகிருது சேல் திங்கள்
   குறைவிலா இருபான்நவதிகதி குருவாரம்
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 29 ம் நாள், 11.04.2024, வியாழக்கிழமை)
   தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
   தேசிகன் கேட்க யோகச்சித்தர் யானும்
4. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
   உண்மையான தரும ஞான வழிகளை
   ஞானமாக மக்களுக்கு அருளும்
   ஞானி அரங்கன் தொடர்புகூட்டி
5. தொடர்பு கூட்டி மக்களெல்லாம் வாழ
   தொண்டென தொண்டரென வந்த
   இடர்வெல்லும் அரங்கன் சீடர்கள்
   எல்லாத்திக்கிலும் களம் கண்டு
6. கண்டுமே அரங்கன் அவதார
   கலிவெல்லும் மகிமை உரைத்து
   உண்டான கொள்கை தன்னை
   உயர்வான அன்னதான சேவையை
7. சேவையை எடுத்துச் சென்று
   செயல்பாடாக களம் காண
   அவனியில் ஆதரவுகள் பெருகி
   ஆன்மீக ஞான அரசியல் களம்

8. களமதும் துவக்கம் ஆகி
கட்டமைப்பு நாளும் பெருக
வலம்வரும் ஞானப்படைகள்
வரம்பெற்ற அரங்கன் சீடர்களாக
9. ஆகவே அகிலம் எங்கிலும்
ஆதரவாக மாற்றம் கூடி
மிகையான வரவேற்பும் மதிப்பும்
மண்ணுலகை மாற்றும் வண்ணம்
10. வண்ணமுடன் எழுச்சித் தோன்றும்
வடிவேலனார் வழி காட்ட
எண்ணமெல்லாம் சுயநலமின்றி
எல்லாம் சேவை நோக்காக
11. ஆகவே மக்களிடை தெளிவும்
அறிவும் ஞானமும் மிகுந்து
மகான் அரங்கன் நோக்கம்
மண்ணுலகில் நிறைவேற வகை செய்வர்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—